DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.358/2022**
Deposition of Witness for – Prosecution : DW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அகிலன் | | : |
| த/பெ | : முனுசாமி | மதம் | : |
| கிராமம் | : அயப்பாக்கம் | தொழில் | : இரயில்வே |
| வட்டம் | : அம்பத்தூர்ள | வயது | : 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 24.02.2026**

**குறுக்கு விசாரணை : Dw1**

நான் Diploma வரை படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நானும் புகார்தாரரும் ஒன்றாக வேலை பார்த்தோம் என்றால் சரிதான். நான் எதிரி வீட்டிற்கு செல்வேன் அவர் என் வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான். எனக்கும் புகார்தாரருக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் இதற்கு முன்பாக இருந்து வந்தது என்றால் சரியல்ல. நான் பணம் வாங்கியதற்கு வருமானவரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாங்கிய கடனிற்கு கடன் பத்திரம் புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். கடன் பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், சாட்சி கையெழுத்து என் மனைவியுடையதாகும். காசோலையில் கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விவரத்தை நான் நிரப்பவில்லை. ரூ.2,00,000/– வாங்கியிருந்தேன் அதை வட்டித்தொகை ரூ.80,000/– த்துடன் அசலும் சேர்த்து புகார்தாரரிடம் செலுத்திவிட்டேன். நான் பணத்தை திருப்பி செலுத்திய பின்பு கடன் பத்திரம் காசோலை திருப்பி வாங்கவில்லை என்றால் கேட்டேன் அவர் தரவில்லை. காவல் நிலையத்தில் புகார்கொடுத்தேனா என்றால் இல்லை, என் நண்பர் என்பதால் புகார் தரவில்லை. எனது காசோலை திருப்பப்பட்ட

பொழுது அது குறித்து வங்கியில் இருந்து செய்தி கிடைத்ததா என்றால் குறுஞ்செய்தி வந்தது. காசோலை திருப்பப்பட்ட விவரம் தெரியுமா என்றால் காவல் நிலையத்தில் இருந்து போலிசார் வந்து தெரிவித்த போது தான் வழக்குள்ள விவரம் தெரியும். வழக்கறிஞர் அறிவிப்பில் காணப்பட்ட முகவரியில் தான் நான் உள்ளேன் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு சார்வு செய்யவில்லை. ரூ.7,50,000/– வட்டிக்காக புகார்தாரரிடம் இருந்து வாங்கினேன் என்றும் அதை திருப்பி செலுத்தவில்லை என்றால் சரியல்ல, ரூ.2,00,000/– தான் கடன் வாங்கியிருந்தேன் அதை வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டேன். நான் பணம் திருப்பி செலுத்தாத காரணத்தினால் கடன் பத்திரம் மற்றும் காசோலை திரும்ப பெறவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் திருப்பி செலுத்தாததால் புகார்தாரர் பணம் கேட்டபோது அதற்கு இவ்வழக்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல, கடன் ரூ.2,00,000/– வாங்கும் போது பாதுகாப்பிற்காக காசோலை கொடுத்திருந்தேன். இவ்வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி பணம் திருப்பி செலுத்தியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையாக பணம் திருப்பி செலுத்தியிருந்தால் பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் போலிசார் வந்து தெரிவித்த போது தான் வழக்குள்ள விவரம் தெரியும். காசோலை திருப்பப்பட்ட விவரம் குறுஞ்செய்தி வந்த உடன் தெரிந்துகொண்டேன். காசோலை திருப்பப்பட்ட தகவல் தெரிந்தததால் தான் வழக்கறிஞர் அறிவிப்பு பெறாமல் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K